வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்
1960

வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்

1960

பொருளடக்கம்

1. முன்னுரை

2. வைணவ சமயம்
கலைப்புலவர் க. நவரத்தினம் 1

3. வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
து. சீனிவாசகம், B. A. 17

4. தோத்திரப் பாடல்கள் 23

முன்னுரை

இச் சிறு நூல் வன்னை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திலிருந்து அவ்வாதீனத்தைச் சேர்ந்த சமூகத்தார் பொருட்டும், பக்தர்கள் பொருட்டும் வெளியிடப்படுகின்றது. வைணவ சமயத்தின் வரலாறும், ஆலயத்தின் வரலாறும் பிரார்த்தனைக்குதவியாக அமைந்துள்ள சில தோத்திரப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. வைணவ சமயம் என்னும் கட்டுரையை எழுதியுதவிய கலைப்புலவர் அவர்கட்கும் தேவஸ்தான வரலாற்றை எழுதியுதவிய ஸ்ரீ து. சீனிவாசகம் அவர்களுக்கும் எமது நன்றி.

இங்ஙனம்,
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஆதீன மகாசபையார்.

யாழ்ப்பாணம்
17-5-60

ஸ்ரீ ராமாநுஜாச்சாரியார்

வைணவ சமயம்

கலைப்புலவர் க. நவரத்தினம்

நல்லோரைக் காக்கவும்,
தீயன செய்வோரை அழிக்கவும்,
அறத்தை நிலை நிறுத்தவும்,
நான் யுகந்தோறும் பிறக்கின்றேன்.
(கீதை 4-8)

சநாதன தர்மம் எனப்படும் இந்து சமயத்தின் பிரிவுகளிலொன்று வைணவம். வைணவம் கடவுளை விஷ்ணு அல்லது நாராயணன் என்னும் நாமத்தில் வழிபடும் சமயமாகும். வைணவத்தின் தோற்றம் சரித்திர காலத்திற்கு முற்பட்டது. வேதங்களிலும், மகாபாரதம் முதலிய இதிகாசங்களிலும் விஷ்ணு வழிபாடு கூறப்பட்டுள்ளது. வைணவத்திற்கு பாஞ்சராத்திரம், பாகவதமதம், சாத்வாத மதம், ஏகாந்தியதர்மம் எனப்பல பெயர்கள் உண்டு. பகவத்கீதையிலும், பாகவதபுராணத்திலும், விஷ்ணுபுராணத்திலும் வைணவ சமயக் கொள்கைகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. வேதங்களிலும், புராணங்களிலும், வைணவசமயக் கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பினும்; வைணவசமய சாதனை முறைகளும், தத்துவ முடிபுகளும், சிறப்பாகப் பாஞ்சராத்திர ஆகமங்களில் விளக்கப்பட்டுள்ளன.

வைணவர்கள் ஸ்ரீமந் நாராயணனையே முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். ஸ்ரீமந் நாராயணனே பத்திரிநாதத்தில், நரநாராயணன் என்னும் நாமத்திலும், வடமதுரை, பிருந்தாவனம், கோகுலம், துவாரகை ஆகிய இடங்களில் கிருஷ்ணனாகவும், பூரியில் ஜெகந்நாதனாகவும், காஞ்சியில் வரதராஜனாகவும், திருப்பதியில் ஸ்ரீ நிவாசனாகவும், பண்டரிபுரத்தில் விட்டலனாகவும், சிதம்பரத்தில் கோவிந்தராஜனாகவும், ஸ்ரீ ரங்கத்தில் அரங்கநாதனாகவும், மதுரையில் அழகராகவும, திருவநந்தபுரத்தில் பத்மநாபனாகவும் வணங்கப்படுகின்றான்.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் திருமால் வழிபாடு கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் சிலர், சைவசமயம் மாத்திரமே தமிழர்களின் சமயமென ஆராய்வின்றிப் பேசி மகிழ்கின்றார்கள். பழந்தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்புகளையெல்லாம் எடுத்துக்கூறும் தொல்காப்பியத்தில் மாயோன் வழிபாடு கூறப்பட்டுள்ளது. தேவாரங்களிற் காணப்படுவன போன்ற பக்திச் செறிவுகள் நிறைந்த பாடல்கள், நாலாயிரத்திவ்விய ப்பிரபந்தத்தில் காணப்படுவதை அறியாத தமிழர் அரிதேயாகும். தென் தமிழ்நாடு முழுவதிலும் சைவசமய தலங்களுக்குச் சமமான பெருமைகள் வாய்ந்த, வைணவ தலங்கள் இருக்கின்றனவென்பதை எவர்தான் மறுத்தல் கூடும்? சங்க நூல்களிலொன்றாகிய பரிபாடலில்,

ஆறுபாடல்கள் திருமாலைப் பற்றியன. பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிலும் திருமாலைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எவ்விதம் சிவ வழிபாடும் முருக வழிபாடும், பண்டைத் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியனவோ, அவ்விதமே திருமால் வழிபாடும் தமிழர்களால் பெருமையோடு வளர்க்கப்பட்டு வந்தது.

தென்னாட்டில் பண்டைக்காலந் தொட்டு நிலவிவந்த திருமால், மாயோன் வழிபாட்டுடன், வடநாட்டிலிருந்து வந்த பாஞ்சராத்திர மதம், பாகவதமதம், வாசுதேவ வழிபாடு ஆகியனவும் ஒன்று சேர்ந்தே இன்று தமிழ் நாட்டில் விளங்கும் வைணவம் உருப் பெற்றது.

வடநாட்டுத் தென்னாட்டுக் கொள்கைகள் எக்காலத்தில் ஒன்று சேர்க்கப்பட்டன வென்பது பற்றிய ஆராய்ச்சி சரித்திரத் துறையைச் சேர்ந்ததாகும். தமிழ் மக்களாலும், பிறராலும் பின்பற்றப்படும் வைணவ சமயத்தின் வளர்ச்சியையும், கொள்கைகளையும் சுருக்கமாக எடுத்து விளக்குவதே எமது நோக்கமாகும்.

ஆழ்வார்கள்

தமிழ் நாட்டில் ஸ்ரீமந் நாராயணனைப் பக்திப்பிரேமையுடன் இனிய தமிழில் பாடிப் பரவசப்பட்ட மெய்யடியார்கள் ஆழ்வார்கள்

எனப்பட்டனர். அவர்கள் (1) பொய்கையாழ்வார், (2) பூதத்தாழ்வார், (3) பேயாழ்வார், (4) திருப்பாணாழ்வார், (5) திருமழிசையாழ்வார், (6) தொண்டரடிப் பொடியாழ்வார், (7) குலசேகர ஆழ்வார், (8) பெரியாழ்வார், (9) ஆண்டாள், (10) திருமங்கையாழ்வார், (11) நம்மாழ்வார், (12) மதுரகவியாழ்வார் என்ப பன்னிருவராவர். ஆண்டாளைச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும், கோதையென்றும் அழைப்பது வழக்கம். இறைவனுடைய திருவடியில் தம்மை முற்றாய் ஒப்படைத்து, அவன் பக்தியில் ஆழ்ந்திருந்தமைபற்றி, அவர்களை மக்கள் ஆழ்வார்கள் என த் திருநாமமிட்டு அழைத்தனர். இம் மெய்யடியார்கள், பல்லவ் அரசர் காலத்திலும், சோழ அரசர் காலத்தின் முற்பகுதியிலும் வாழ்ந்தார்களென ஆராய்ச்சியாளர் கூறுவர். கி. பி. ஆறாந் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற்றாண்டிற்கும் இடையிலுள்ள காலமே இவர்கள் காலமெனக் கொள்ளுதல் பொருத்தமுடைத்தாகும்.

ஆழ்வார் பெருமக்களால் பாடப்பெற்ற திருப்பாடல்களின் தொகுதி **நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்** என அழைக்கப்படும். இச்சிறந்த பாடல்கள், தமிழ்மொழிக்கும், இறைவழிபாட்டிற்கும் பெருமை தந்து விளங்குவனவாகும் என்பது பேரறிஞர் கருத்தாகும். ஆழ்வார்கள், பக்தியும், துறவும், அன்பும், சமரச நோக்கும் உடையோராய் விளங்

கினுர்களென்பதற்கு அவர்களின் பாடல்களும், வாழ்க்கை நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. சிவபிரானும் திருமாலும் ஒருவரேயென்னும் பெருவுண்மையை ஆழ்வார்களின் பாடல்களிற் காணலாம்.

"ஏற்ருன் புள்ளுர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்ருன் நிழல்மணி வண்ணத்தான்— கூற்ருருபால்
மங்கையான், பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள் கழலான் காப்பு.

பொய்கையாழ்வார்

தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும், பொன்னணியும் தோன்றுமால்- சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்ருய் யிசைந்து.

பேயாழ்வார்

ஆழ்வார்களின் பாடல்களில் நாயக-நாயகி பாவத்தை அநுசரித்த பக்திச் சுவையைக் காணலாம். ஸ்ரீ ஆண்டாளின் "வாரணமாயிரம்" என்ற பதிகம், உலகத்திலுள்ள அநுபூதிக் காதல்நெறிப் (Erotic Mysticism) பாடல்களில் தனியிடம் பெறத்தக்கது. உதாரணமாக இரண்டு பாடல்கள் காட்டுவாம்

இந்திர னுள்ளிட்ட தேவர் குழா
மெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி
மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி
மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன்
தோழி நான்.

இம்மைக்கு மேழ்பிற விக்கும்
பற்றுவான்
நம்மை யுடையவன் நாராயணன்
நம்பி
செம்மை யுடைய திருக்கையால்
தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்
தோழி நான்.

(நாச்சியார் திருமொழி 6–558ம்-563ம்)

ஆழ்வார்களின் பாடல்கள் முழுவதிலும் பக்திச் சுவையே நிறைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மக்களின் பாரம்பரியத்தின் வழிவந்த அன்புநெறி ஆழ்வார்களின் திருவுள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து ஓடியதெனக் கூறின் அது மிகையாகா. ஆழ்வார்கள் சாதிப் பித்தற்ற சமரச மெய்யடியார்களாவர். திருப்பாணாழ்வார் தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தவர்.

அமரவோ ரங்கமாறும்
வேதமோர் நான்குமோதி
தமர்களில் தலைவராய
சாதியந்த ணர்களேலும்

நுமர்களைப் பழிப்பாராகில்
நொடிப்ப தோரளவில் ஆங்கே
அவர்கள் தாம் புலையர்போலு
மரங்கமா நகருளானே.

பழுதிலா வொழுக லாற்றுப்
பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேலு
மெய்யடி யார்களாகில்
தொழுமினீர், கொடுமின் கொள்மி
னென்று நின்னோடு மொக்க
வழிபட வருளினாய்போல்
மதிள் திரு வரங்கத்தானே.
(தொண்டரடிப் பொடியாழ்வார்)

எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியதிலிருந்து ஆழ்வார்களின் அன்புநெறி எத்தகைய வன்மையும், சமரசமுங்கொண்டு விளங்கியதென்பதை நாம் அறியலாம்.

ஆசாரியர்கள்

ஆழ்வார்களின் உள்ளங்கனிந்தெழுந்த அன்பு நெறியையும், உப நிஷத்துக்கள், பகவத் கீதை, பிரம்ம சூத்திரம், பாஞ்சராத்திர ஆகமங்கள் ஆகியனவற்றில் கூறப்பட்ட தத்துவ முடிவுகளையும் ஒன்று சேர்த்து, உத்தமமான பக்தி மார்க்கத்தை உலகத்திற்களித்த பெருமை வைணவ ஆசாரிய பெருமக்களுக்குரியதாகும். அவர்களுள் சிறந்தோர், நாதமுனிவர், யமுனாச்சாரியார், இராமாநுஜர், வேதாந்ததேசிகர், மணவாள மகாமுனிவர் என்போராவர்.

நாத முனிவர், பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். வடமொழி, தென் மொழி இரண்டிலும் சிறந்த பாண்டித்தியம் படைத்தவர். யோக சித்தி வாய்க்கப் பெற்றவர் அவர். யாத்திரிகன் ஒருவன் சடகோபர் என அழைக்கப்படும் நம்மாழ்வாரின் பதிகத்திலொன்றாகிய

ஆராவமுதே யடி யேனும்
நினபா லன்பாலே
நிராய லைந்து கரையவுருக்குகின்ற
நெடு மாலே
சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக் குடந்தை
ஏராரர் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டேனெம் மானே

என்ற திருப்பாசுரத்தை பாடக் கேட்டு அப் பாட்டில் பரவசப் பட்டு, நம்மாழ்வாரும் பிற ஆழ்வார்களும் பாடிய பாடல்களைத்தேடித் தொகுத்து அதற்கு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் என்னும் நாமமிட்டு அவற்றை வேதங்களுக்குச் சமமாக வைணவர்கள் ஓதி வரும் வண்ணம் இசையுமமைத்து பணியாற்றினர். நாத் முனிவர் காலத்தின் பின் தான் தமிழ்ப் பாடல்கள் வடமொழி வேதங்களுடன் சம நிலைபெற்று விளங்கியன. இப்பெருமையைத் தமிழுக்கு ஆக்கி வைத்த பெரியார் நாத முனிவரே. பிற்காலத்தில் இராமாநுஜரால் எடுத்து விளக்கப்பட்ட விசிட்டாத்வைதக் கொள்கைக்கு வித்திட்டு வைத்தவரும் இவரே யாவர்.

நாத முனிவரின் சீடர்கள் எண்மருள் முதலிடம் பெற்றவர் புண்டரீகாக்ஷர். புண்டரீகாக்ஷரின் சீடர் இராமமிஸ்ரர், இராமமிஸ்ரரின் சீடரும், நாத முனிவரின் பேரனுமாகியவரே பிரசித்தி பெற்ற யமுனாச் சாரியார். இவரின் சீடரின் சீடரே உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ இராமாநுஜாச்சாரியார்.

இராமாநுஜர் கி. பி. 1017 ஆண்டில் பிறந்தார். கி. பி. 1137ம் ஆண்டில் ஸ்ரீமந் நாராயணன் திருவடியை அடைந்தார். வேதாந்தத்தின் பிரிவுகளிலொன்றாகிய விசிட்டாத்வைதத்தை மிகச் சிறப்பாக எடுத்து விளக்கி, நிலை நாட்டிய பெரியார் இராமநுஜரேயாவர். அவர் உபநிஷத்துக்களிலும், வேதாந்த சூத்திரத்திலும், பகவத் கீதையிலும் கூறப்பட்ட உண்மைகளுக்கும், ஆழ்வார்களின் திருப்பாடல்களில் காணப்படும் அநுபூதி முடிபுகளுக்கும் முரண்பாடில்லாத விதத்தில் ஸ்ரீ வைணவ மதத்தை நிலை நாட்டியுள்ளார். ஸ்ரீபாஷியம் என்னும் பெயருடன் ஒரு விரிந்த வியாக்கியானத்தை வேதாந்த சூத்திரத்திற்குச் செய்துள்ளார். பகவத் கீதைக்கும் ஒரு சிறந்த உரை விசிட்டாத்வைத மரபுக் கிணங்கச் செய்தனர். உபநிஷத்துக்களின் உண்மைக் கருத்துக்களைவிளக்கி "வேதார்த்த சங்கிரகம்" என்னும் ஒரு நூலையும் செய்துள்ளார்.

அத்வைத வேதாந்தக் கொள்கைகளால் பக்தி மார்க்கம் பாதிக்கப்பட்டிருந்த காலத்

தில், அநுபூதிப் பேற்றுக்குப் பக்தியே இன்றி யமையாத்துணையாகு மென்றும், சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நான்கின் முடிபே பக்தியென்றும் வலியுறுத்தி, சமய பக்தியையும், ஆலய சேவையையும் நிலை நாட்டி வைத்தவர் இராமாநுஜரே யாவர். உலகம் நிலையற்ற மாயா தோற்றமென்று கூறிய அத்வைதிகளை மறுத்து, உலகம் நிலையுள்ள உண்மைப் பொருள் என்றும், அது இறைவனின் பிரிக்கப்படாச் சக்தியாக விளங்கும் ஸ்ரீ மகா இலக்குமியிலிருந்து தோற்றியதென்றும் நிலை நாட்டினர். தத்துவஞான விசாரணையையும், சமயத்தையும் வேருக்காது ஒன்று படுத்தி இவை இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமெனக் காட்டினர். இறைவன் அநந்த கல்யாண குணங்கள் நிறைந்தவனென்றும், அவனைப் பக்தியாலும், அன்பாலும், ஜீவ காருண்யத்தாலும் வழிபட்டுய்யலாம் என்றும் அவர் எடுத்து விளக்கினர். சாதி வித்தியாசம் பாராட்டாது விஷ்ணு பக்தியை எல்லா மக்களிடத்தும் பரப்பினர். இராமாநுஜர் சமய வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கும், பக்திமார்க்கத்தின் உயர்வுக்கும் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியதாகும்.

வடகலையும், தென்கலையும்

இராமநுஜரால் அமைக்கப்பட்ட சம்பிரதாயம் பிற்காலத்தில் இரண்டாகப் பிரிந்தது. அவை வடகலையென்றும், தென்கலையென்றும், அழைக்கப்பட்டன. வடகலை ஆசாரியருள்

சிறந்தவர் வேதாந்த தேசிகர் (1268-1369). இவருக்கு மாறுபட்ட கொள்கையுடையோராகிய பிள்ளை உலோகாசாரியரால் (1264-1327) தென்கலைக் கொள்கைகள் நிலைநாட்டப் பெற்றன. தென்கலை ஆசாரியருள் சிறந்தவர் மணவாள மகாமுனிவர் (கி. பி. 1370-1443).

வடகலைக்கும் தென் கலைக்குமுள்ள வேறுபாடுகள் பின் வருவன:-

1. தென் கலையார் திவ்வியப் பிரபந்தத்தையே சிறந்த பிரமாணமாகக் கொள்வார்கள். வடமொழி நூல்களாகிய வேதங்களிலும் மேலாக இதனைக் கொள்வார்கள்.

2. வட கலையார் வேதநூற் பிரமாணத்தையும், பிரபந்தத்தையும் சமமாகக் கொள்வார்கள்.

3. வட கலையார் நாமத்தை புருவமத்தியோடு நிறுத்திக் கொள்வர். தென் கலையார், நாமத்தை, மூக்கு அடிவரையும் இழுத்து எழுதுவார்கள்.

4. வைணவ சமயத்தின் சிறந்த கொள்கையாகிய பிரபத்தியை வடகலையார் ஒரு விதமாகவும், தென் கலையார் வேறுவிதமாகவும் விளக்குவார்கள். வடகலையாரின் விளக்கம் மர்க்கட நியாயம் பற்றியதென்றும், தென் கலையார் விளக்கம் மார்ஜ்ஜார நியாயம் பற்றியதென்றும் கூறப்படும். குரங்குக் குட்டி தாயைத் தானே வலிந்து பிடித்துக் கொ-

வது போல பக்தன் தன் முயற்சியால் இறைவனைத் தனது உள்ளத்தினால் இறுகப்பிடித்துக் கொண்டால், இறைவன் அவனுக்கு வேண்டியதைச் செய்வாரென்பது வடகலையார் கருத்து. பக்தன் தன் செயலில்லாது எல்லாம் இறைவன் செயலென்பதை உணர்ந்து, தன்னை முழுவதும் அவனிடத்தே ஒப்படைத்திருந்தால், பூனை தன் குட்டிக்கு வேண்டியதைத் தானே தேடிக் கொடுப்பதுபோல, இறைவன், பக்தனுக்கு வழி காட்டுவாரென்பது தென் கலையார் விளக்கம். உற்று நோக்கி உணரும் போது இருவர் கருத்தும் ஒன்றாக விருப்பதைக் காணலாம்.

5. மகா இலக்குமிக்கும், மகா விஷ்ணுவுக்கு முள்ள தொடர்பை இரு பிரிவினரும் வெவ்வேறு விதமாகக் கூறுவர்.

ஸ்ரீ வைணவமும் வடநாடும்

இராமாநுஜரது போதனைகள் அவருக்குப் பின், அவரது சீடபரம்பரையினர் மூலம் வட இந்தியாவிலும் பரவின. இராமாநுஜரது பரம்பரையில் ஐந்தாம் பீடாதிபதியாக விளங்கிய இராமாநந்தர் மூலம் வடநாட்டில் ஸ்ரீ வைணவம் பரவியது. இவர் காலம் கி. பி. 1299 தொடங்கி 1410 ஆகும். காசியில் வசித்த ஸ்ரீ வைணவ அடியாராகிய இராகவேந்திரரே இவரது குருவாகும். இராமாநந்தரின் சீடர் கபீர்தாசர், மீராபாய், துளசிதாசர் முதலியோர் இராமா நந்தர் சந்தானத்தில் தோற்றிய பக்தர்களாவர்.

வைகானசம்

வைணவ சமயத்தில் வைகானச ஆகமக் கிரியைகளும் காணப்படுகின்றன. இவை வைகானச ரிஷியால் அமைக்கப்பட்டனவென்பது பாரம்பரியக் கொள்கையாகும். இவைகளில் வைதீகத் தொடர்பு அதிகம் உண்டு. தமிழ்ப் பிரபந்தங்களைப் பூசையில் ஓதும் வழக்கம் இப் பிரிவினர்க்கு இல்லை.

மூர்த்தி இலட்சணம், ஆலய அமைப்பு ஆகியன வைகானச ஆகமங்களின்படியே செய்யப்படுகின்றன. தென்னாட்டிலுள்ள வைணவ ஆலயங்களில் பெரும் பிரிவு வைகானச முறைப்படியே பூசைக் கிரமங்களை நடத்துகின்றது.

ஆழ்வார்கள், ஆசாரியர்கள், மடாதிபதிகள் முதலியோரை வணங்கும் வழக்கம் வைகானசர்களிடத்தில் இல்லை. ஸ்ரீமந் நாராயணன் ஒருவரையே அவர்கள் வழி படுவார்கள். மூர்த்தி உபாசனையை வைகானசர் சிறந்த சமயசாதனமாகக் கொள்வார்கள்.

வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் பூசை ஒழுங்கு வைகானச முறைப்படியே நடக்கின்றது.

மத்துவாச்சாரியர் (கி. பி. 1199–1278)

இராமாநுஜரது விசிட்டாத்வைதக் கொள்கைகளுக்கு மாறுபட்ட தத்துவ முடிபுகளை கன்னட தேசத்திலுதித்த மத்துவாச்சாரியரென்னும்வைணவ ஆசாரியார் நிலைநாட்

டினர். இவரது கொள்கைகள் துவைத வேதாந்தமெனப்படும். உபநிஷத்துக்களுக்கும் வேதாந்த சூத்திரத்திற்கும், பகவத் கீதைக்கும் இவர் உரை வகுத்துள்ளார். இவரது சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை சத்வைணவர்களெனவும் அழைத்துக் கொள்வார்கள்.

இராமாநுஜர் கடவுள், உயிர், உலகம் (சடம்) ஆகியன இறைவனுடன் தொடர்புடைய பொருள்களென்றார். ஒரு பொருளுக்கும், அதன் குணத்திற்கும் உள்ள தொடர்பு போலவே, கடவுளுக்கும், உயிர், உலகம் இரண்டுக்குமுள்ள தொடர்பென்பது விசிட்டாத்வைதக் கொள்கை. துவைதவைணவராகிய மத்துவர் இம் மூன்று பொருள்களும் தொடர்பற்ற தனிப் பொருள்கள் என்று நிலை நாட்டினர். துவைத வைணவர்களுள்ளும் இரு பிரிவினருளர். அவர்கள் வியாச கூட்டத்தார், தாச கூட்டத்தார் எனப்படுவர். வியாச கூட்டத்தார் வடமொழி நூல்களைப் பிரமாணமாகக் கொள்வார்கள். தாச கூட்டத்தார் கன்னட மொழி நூல்களைப் பிரமாணமாகக் கொள்வார்கள்.

இறைவனின் தோற்றம்

வைணவ சமய நூல்கள் ஸ்ரீ மந் நாராயணன் உலக சேமத்தின் பொருட்டும், அடியார் பொருட்டும் ஐந்து விதமான வடிவங்களில் தோற்றுகின்றாரெனக் கூறும். அவை பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம்,

அர்ச்சை எனக் கூறப்படும். பரத்துவம் திரு மால் பரமபதத்திலுள்ள நிலை. வியூகம் படைத்தல், காத்தல், அழித்தலாகிய தொழில்கள் பொருட்டு எடுக்கும் நிலையாகும்: அவை வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியுத்மணன் அநுருத்தன் எனப்படும். விபவம் அவதாரங்களாகும்: அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமணர், பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என்பனவாம். அந்தர்யாமித்துவம் எள்ளுறு நறுநெய் போல் பொருள்கள் தோறும் விரவி நிற்கும் நிலையாகும். அர்ச்சை திருக்கோயில்களில் காணப்படும் திரு வடிவங்களாகும்.

வைணவ சமயத்தில் காணப்படும் சிறந்த கொள்கை எதுவாகில், இறைவன் உலக மக்கள் க்ஷேமத்தின் பொருட்டு காலந்தோறும் பூமியில் அவதரிப்பாரென்பதே. இவ்வுண்மையை எடுத்துக் கூறிய முதல்நூல் ஸ்ரீ பகவத் கீதையேயாகும். இக் கொள்கை, இந்து சமய மக்கள் அனைவரது மனத்திலும் வேருன்றி நிலைத்துள்ளதென்பதை எவ்வரும் மறுக்க முன்வரார். பௌத்த சமயமும், கிறீஸ்த சமயமும், இக் கருத்தைக் கூறுவதன் முன்பே பகவத்கீதை கூறியுள்ளது.

ஸ்ரீவண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலைச் சேர்ந்த வைணவர்கள் இராமாநுஜரது வைணவ சம்பிரதாயத்தையே சேர்ந்தவர்கள். இவர்களிடையே வட கலையாரும், தென் கலையாரும் உளர்.

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய்க்கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ
யிந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

"தொண்டரடிப்பொடியாழ்வார்"

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

து. சீனிவாசகம், B. A.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஈழத்திற் சிறந்த வைணவ ஆலயங்களுள் ஒன்றாகும். இது பழமை வாய்ந்தது. பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலச் செட்டிப் பிள்ளைகளால் இக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இவர்களின் சரித்திரமும் இக்கோயிலின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. இவர்கள் கி. பி. 1665-ல் தென்னிந்தியாவிலிருந்து ஒல்லாந்தரால் நெசவுத்தொழில் விருத்திக்காகக் கொண்டு வரப்பட்டவர்களாவர். * ○ அக்காலத்தில் ஒல்லாந்தர் கிறி

Anthony Paviijoen, Memoirs left by Anthony Paviijoen, Commandeur of Jaffna Patam to his successor in 1665.

'கி. பி. 1347ல் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் முடி சூட்டப்பட்ட குணபூஷண சிங்கையாரியன் தன் காலத்தில் ஆந்திர நாட்டினின்றும் காஞ்சியினின்றும் நுண்ணிய கைத்திறமைவாய்ந்த காருகவினையாளரைக் கொணர்ந்து வண்ணார்பண்ணையிற் குடியேற்றுவித்தானென ஒரு ஐதீகமுண்டு.' இவர்கள் தான் இக்கோயிலைச் சேர்ந்த பத்மசாலிகளா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

ஸ்து சமய விருத்திக்காகப்பெருமுயற்சி செய்தனர். அவர்கள், இந்துக்கள் கிறிஸ்தவ ஆலயங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிற் போகவேண்டுமென்றும், இந்துப் பிள்ளைகள் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களுக்குப்போய் கிறிஸ்தவ சமய பாடங்கள் கற்க வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். கிறிஸ்து மத விரோதியாக ஒழுகி வந்த ஒருவர் கண்டு பிடிக்கப்படின் அவருக்குக் கடுந்தண்டனை விதித்தார்கள்.

நெசவுத் தொழிலை விருத்தி பண்ண எண்ணங்கொண்ட ஒல்லாந்தர் அக்காலத்தில் இச் சாகியத்தினரைத் தம்மிஷ்டப்படி வணங்க விட்டனர். அவர்கள் இந்துசமய வழிபாடு செய்வது கிறிஸ்து சமய விருத்திக்குப் பெருந் தடையாயிருந்ததெனப் பல தடவைகளிற் கிறிஸ்தவக் குருமார் முறையிட்டும் ஒல்லாந்த அரசாங்கம் செவிசாய்த்திலது. * ০

மேலே குறிப்பிட்டதிலிருந்து இக்கோயில் இப்போ இருக்கின்ற கட்டடங்களுடன் இல்லாவிட்டாலும் சிறிய கோயிலாகவாயினும் ஒல்லாந்தர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்பது அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

---

* Baldeus–Ceylon, Amsterdam. 1672.

০ முதலியார் செ. இராசநாயகம்--யாழ்ப்பாணச் சரித்திரம்.

கி. பி. 1820ம் ஆண்டிலிருந்தே கோயிலுக்கு நிலங்கள் முறைமையாகத் தரும சாதனஞ் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இக்கால எல்லைக்கு முன்னுள்ள விபரங்கள் எழுத்திற் காணக்கூடியதாகவில்லை. பராபரிப்புத் தத்துவகாரர் இருவரில் ஒருவர் இறந்து விட்டபடியால் பராபரிப்புத் தத்துவகாரரை நியமித்து 1870ல் எழுதிய உறுதிச்சாதனம் இருக்கின்றது அதற்கு முன் எழுதப்பட்ட சாதனங்கள் கிடைத்தில. 1850ம் ஆண்டு கோயில் அதிகாரிகள் சில மேளகாரரைக் கோயில் தொண்டிற்காக ஏற்படுத்தியதாக அவ்வாண்டு எழுதப்பட்ட உறுதிச் சாதன மொன்றில் காணப்படுகின்றது. 1870, 1878, 1901, 1908, 1917, 1927, 1942 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவ உறுதிச் சாதனங்கள் இருக்கின்றன. எனவே இக் கோயில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே கோயில் ஆதீன மகாசபையாரால் முறைமையாக நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கின்றதென்பது வெள்ளிடை மலை.

பண்டாரவாளச் செட்டிப்பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலிகளால் இக் கோயில் இப்போதும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் இக்கோயிலின் ஆதீன மகாசபை அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இவ்வாதீன மகாசபையாரே காலத்துக்குக்

காலம் கோயில் பராபரிப்புத் தத்துவகாரர் களை நியமிக்கின்றனர்.வருடாவருடம் கோயிற் கணக்குகள் இச்சபையார்முன் சமர்ப்பிக் கப்பட்டுச் சரிபார்க்கப்படுகின்றன. இக்கோ யிலின் சகல உரிமைகளும் அச்சபையாருக்கே சொந்தமாக இருக்கின்றன.

இச் சாகியத்தாரில் வைணவர்களும் வீர சைவர்களும் இருக்கின்றனர். வைணவர் களில் தென்கலையாரும், வடகலையாரும் இருக்கின்றனர். இவர்களின் உறவினர் தற்பொழுதும் தென்னிந்தியாவில் காரைக் கால், திருமலைராயன்பட்டினம் ஆடுதுறை, வலங்கைமான், திருச்சரை, கும்பகோணம், திருநாகேஸ்வரம்,கோவிந்தபுரம் ஆகிய இடங் களில் வசிக்கின்றனர். இவ்விடங்களிலும் மன்னார்கோயில், காஞ்சீபுரம் ஆதிய இன்னும் பலவிடங்களிலும் இச்சாதியினர் வசிக்கின் றனர்.

இக்கோயில் உள்ள நிலம் 'அடியார்க்கு நல்லான் வரம்பு' என உறுதிச் சாதனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது கோயிலுக்குப் பக்கத்திலுள்ள நிலங்களும் அடியார்க்கு நல் லான் வரம்புகள் எனவே அந்நிலங்களின் உறுதிச் சாதனங்கள் குறிப்பிடுகின்றன. சிலப் பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல் லாரும், ஈழத்தில் சிங்கைநகர் அமைச்சராக இருந்த அடியார்க்கு நல்லாரும், இக்கோயி

லும் சுற்றுடலும் இருக்கும் நிலத்தின் உறுதியில் கூறப்படும் அடியார்க்கு நல்லாரும் ஒருவரேயென்றும் சிலர் கருதுகின்றனர்.*

இக்கோயிலின் ஸ்தல விருட்சம் பலாமரமாகும். ஆலயத்தின் உட்பிரகாரத்தில் இலக்குமி அம்மன் சந்நிதிக்குப் பின்பக்கத்தில் இவ் விருட்சத்தைக் காணலாம். இம்மரம் போறையாக இருக்கின்றதுடன் ஒருபக்கத்தில் வெளியாகவும் இருக்கின்றது. இதன் நடுமரம் அழிந்து போகவே சுற்றிவர அதன் அடிமரம் காணப்படுகின்றது. பக்கங்களின் அடியிலிருந்து கிளைகளும் தோன்றுகின்றன. கோயில் கட்டு முன்பு இச் சாகியத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் அப் பலாமரத்தடியில் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் விக்கிரகத்தை வைத்து வணங்கி வந்தாரென்றும் அதிலிருந்தே இவ்வாலயம் உற்பத்தியானதென்றும் ஓர் ஐதீகமிருக்கின்றது. அந்த ஆதிச் சிறிய விக்கிரகத்துக்குத் துவஜாரோகண காலத்தில் தீர்த்தத் திருவிழாவன்றும் விடாயாத்தித்திருவிழாவன்றும் விசேஷ பூசைகள் நடைபெறுகின்றன.

விஷ்ணு ஆலயங்களில் வைகாசன முறைப்படியும் பாஞ்சராத்திர

---

* பொ. செகந்நாதன்--அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி.

முறைப்படியும் கிரியைகள் நடைபெறு கின்றன. இவ்வாலயம் வைகானச முறைப் படி கிரியைகள் நடைபெறும் கோயிலாகும்.

1884ல் ஒரு கும்பாபிஷேகமும், 1941, 1952ஆம் ஆண்டுகளிற் சம்புரோக்ஷண அஷ்டபந்தன கும்பாபிஷேகங்களும் நடை பெற்றிருக்கின்றன.

ஓம் ஸ்ரீமந் நாராயணாய நம:

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தோத்திரப் பாடல்கள்

குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாரா யணா வென்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

வேதநூற் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவ ரேலும்
பாதியு முறங்கிப் போகும்
நின்றதிற் பதினை யாண்டு

பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்

திருப்பல்லாண்டு

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை
யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்குமப்
பாஞ்சசன் னியமும் பல்லாண்டே

—பெரியாழ்வார்

ஸ்ரீ விநாயகர்

கண நாதம் கண நாதம்
ஈஸ்வர புத்திரம் கண நாதம்
விக்ன விநாயக கண நாதம்
சித்தி விநாயக கண நாதம்
மூஷிக வாகன கண நாதம்
மோதகஹஸ்த கண நாதம்
பார்வதி புத்ரம் கண நாதம்
முக்திப் பிரதாயக கண நாதம்

—கணநாதம்

பண்டிதர் நெ. வை. செல்லையா அவர்கள் இயற்றியவை*

I

சங்கு சக்ர பீதாம்பர தாரி
தந்த வக்ரசிசு பாலசம் மாரி
சலசலோசன தற்பர நீதா
அகில லோக அரி அற்புத போதா
என்னை யாள் பர நாத முராரி
ஏதி லார்க்கருள் துய்ய புராரி
நித்திய தத்துவ நின்மல ரூபா
சித்த முண்டுகொல் பத்துமநாபா

II

வாசு தேவ பரந்தாமா
சோதை மகிழ்ந்த அரிராமா

பின்னை மகிழ்ந்த பிரா ணேசா
வண்ணை யமர்ந்த அருள் வாசா

பூவுல குண்டுமிழ் சீதரனே
போற்றினே னுன்னடி மாதவனே

கோபா லா அரி கோவிந்தா
கோகுல நந்தன ஸ்ரீ பாலா

எங்கு நிறைந்த பரம்பொருளே
எந்த னிடர்வினை தீர்த்தருளே

வேங்கட மாமலை யோங்கியவா
ஈங்கது போலுன தருள் தரவா

---

*1921ம் ஆண்டில் இயற்றப்பட்டவை.

III

அட்டாட் சரப் பொருளாய்நிறைந் தாயே
கஷ்டமி லாதெனைக் காத்தருள் வாயே

பண்ணவர் பணியும்வை குந்தா முகுந்தா
பாவிக்கு னின்னருள் பாலிப்பா யெந்தாய்

பாதுகை யீந்த பரமத யாளா
மாதொளிர் மேனி மறைமுடி யாளா

தந்தைசொற் காய்முடி தன்னைவி டுத்தோய்
வந்தனை செய்சுரர்க் கபய மளித்தோய்

அண்ட சராசர மெங்கு நிறைந்தாய்
அளவினைத் தூணில் அறிந்திட வந்தாய்

IV

ஆதிமூல ஆதிமூல ஆதிமூல நாதனே
வேதபர நாதமூல ஆதிமூல நீதனே

நாவிழுந்து கண்மயங்கி நாடியோயும் போதிலே
தாவிவந்தென் முன்னே நின்று தாங்கியா தரிப்பாயே

அத்திநின்று மூலமென்ன ஆழியேவு மச்சுதா
சித்தமுன்னை யன்றியில்லைச் ஸ்ரீநமோ நாராயணா

வித்தநித்த சுத்தமுத்தி சத்திபால சித்தனே
பத்தருத்த மத்திறந்து சித்தமாடும் கத்தனே

மாடுவீடு பாடுகொண்டு நீடுமென்ற னுள்ளமே
தேடுகாடு சென்றிடாமு னுடுமேயென்
னுள்ளமே

அந்திவண்ண மாழிவண்ணஞ் சிந்தைவண்ண
மானவா
நொந்தழைக்கு மேழைமீது நோக்குவேயின்
காணவா

V

வனமாலைத் திருமாலைப் போற்று
வருமாலைத் தரியாமல் நீற்று

நலிகின்ற மட நெஞ்சே! நில்லு
நாராய ணாவென்று சொல்லு

கலங்காதே மடநெஞ்சே! நில்லு
காகுத்தன் நாமத்தைச் சொல்லு

சீரழியும் மடநெஞ்சே! நில்லு
சீதரனை நாவாரச் சொல்லு

துளாய்மாலை யான்பெயரைச் சொல்லு
துயரம்போய் விட்டதெனத் துள்ளு

பாற்கடற் பள்ளியான் பெயரே
பாவி காள் சொல்லுவீர்! நீரே

கேடழிய வேண்டுமென் னெஞ்சே
கேசவன் திருவடி யிறைஞ்சே

மாயவாழ் வின்னலுறு மனமே
மாயனடி பத்திசெய்தினமே

பொன்பூமி யாடையணி வீடு
பொங்குமா தவனடியை நாடு

VI

திருவளரும் மணமகள் கணவா! உந்தன்
திருவருளை வேண்டினேன் துதிசெய்யத்
துணைவா

வண்ணை நகர் வாசனே! சரணம்—எந்தன்
வலியபிணி கலிநலியத் திருவடியே சரணம்

மாரிதடுத் தாண்ட கோபா! கருணை
மாரியளித் தாளும்தே வகிதேவி பாலா!

அன்னமா யருமறைசொல் வாயா! நீண்ட
ஆதிதிரு விக்ரம அமலனே! மாயா!

உன்னடிக் கென்னொரு விண்ணப்பம்; தாரு
முலையாது துயராழி நீந்தவொரு தெப்பம்

அரிநமோ நாராயணா! வென் றமரர்
அஞ்சலிசெய் தடிபணியுஞ் செஞ்சரணம்
போற்றி

பொல்லாத மாயமிடி நீங்கி—உந்தன்
பொற்பாத கமலத்தை யெப்போதுந் தாங்கி

கைதவ மிலாதுனடி பாடி—நாளும்
கநகவெம் பரநாத னே! யென்று தேடி

கைவிடே லுன்னடிக் கபயம்—மிகவும்
கவலையுற் றேனளியும் நின்பாத உபயம்

பரிபவம தால்நிதமும் வாடிப்—பாழில்
பாவியேன் தவியாது தேவியருள் கூடி

வண்ணைநகர் வேங்கடேச் சுரனே!—கமல
மாதுவளர் பூவைநிற மேனிவளைக் கரனே

கோபால னேயரி முகுந்தா! பின்னை
கூடி மகிழ் சீதரா! பூவை நிற வண்ணா

VII

செந்தமிழ்ப் பின்சென்ற செல்வக் கொழுந்தே
சேவடி துதிசெய்யத் திருவருள் நீயே

ஏழுமலைப்பொரு ளாயிருந்தாயே
என்துதி தன்னையு வந்தருள் வாயே

சீதர கேசவ நந்த முகுந்தா
நீத பரத்துவ நாத வரந்தா

நீல முகுந்தா நிருதர்கள் காலா
வேலையின் மேற்றுயில் பாலக சீலா

பாண்டவ தூதா பத்தும நாபா
நீண்டருள் வாமன நின்மல கிருபா

சுத்தசை தன்னிய சுந்தர மூர்த்தி
சோதிசு தர்சன நிட்கள மூர்த்தி.

VIII

சோலைமலை மீதிருக்கும் சோதிமயமே! பர
காலன்துதி செய்யுமொரு நீலமயமே

ஓரிரவி லோர்மனையில் வந்து பிறந்தாய்!
அன்றே
ஓரிரவிலோர் மனையில் நன்று கிடந்தாய்

மாயவன்னையாகிவந்த பூதகிதனை—முலை
வாயில்வழி ஆவிகொண்ட சீதர! நினை

IX*

வண்ணைதனில் மன்னுகின்ற
வெண்ணெ யுண்ட பாலா
புண்ணியர்கள் எண்ணுகின்ற விண்ணிலவு
சீலா

1. மீனமாகி ஆழிபுக்குச் சோமுகனைக்
காய்ந்தாய்
விண்ணவர்கள் துன்பொழிய வேதமதை
யீந்தாய்

2. வேலைதனிற் கூர்மமாகி மேருவைக் கீழ்
ஆண்டாய்
மேலவர்க்கு மாளாவுண வீய்ந்திறைமை
பூண்டாய்

3. கோலமாகிப் பூமிகண்ட கூடாரைவெல்
மாயா
நாலு வாயின் துன்பகற்றி நாடளித்த
தாயா

4. பொன்னவற்காய் நரமடங்கல்
பூண்டு தூணில் வந்தாய்
பூரணமா யெங்குமான
பொய்யா மொழி தந்தாய்

5. மாபலிபால் மூவடிக்காய்
மண்ணும் விண்ணும் கொண்டாய்
வானதியால் சேவடியை மஞ்சன நீர்
கண்டாய்

---

*1937-ம் ஆண்டில் இயற்றப்பட்டது.

6. வேந்தர்குலங் கட்டறுத்த மேவலர்கள்
காலா
மெய்ம்மை நீடச் சனகிபாகன்
விட்டதவச் சீலா

7. தந்தைமொழி தாங்கிவனந்
தன்னிலர சாண்டாய்
சற்சனரைக் காப்பதற்காய் தாசரதி
யானாய்

8. முன்னவனாய் குண்டலன்பேர்
மூண்டபல தேவா
முசலிவெள்ளை நீலாம்பரா
மொய்ம்புடைய தேவா

9. கஞ்சன்மனை வந்துதித்த
கண்ணா மணி வண்ணா
காவாயென்ற காரிகையைக்
காத்த புயல் வண்ணா

10. நல்லறங்கள் தேயும்போது
நானிலத்தில் தோற்றுவாய்
சொல்லுமாடற் களவுமுண்டோ
துளாயலங்கல் மார்பனே

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் இயற்றியவை*

1

ஹரி ஹரி கோவிந்த ராமா

1. ஹரி ஹரி கோவிந்த ராமா—ராம் ராம்
அநுதினமும் பக்தி செய்ய அருள்புரிய
வா வா

2. வைகுந்த வாசனே ஈசா— ராம் ராம்
வையகம் புகழ்பெறு ஜானகி லோலா

3. தேவர்கள் துயரது நீங்க- ராம் ராம்
திரிலோகம் அருள் தங்கி ஓங்கியே
வாழ்க

4. இராவண சந்ததி மாள்க- ராம் ராம்
இராட்சசர் கொடுமைகள் பலவுமே
நீங்க

5. சுந்தர மாகவ யோத்தி- ராம் ராம்
துலங்கிடக் குழந்தையா யுதித்திட்ட
மூர்த்தி

6. தேவகி மகிழ்வுறு பாலா- ராம் ராம்
தேவர்கள் பக்தி செய் தேத்திடும்
போதா

7. அகலிகை ரட்சக தீரா- ராம் ராம்
அத்தியந்த மெனக் கன்புமே- தாதா

8. பந்தங்கள் அகன்றுமே யானும்-
ராம் ராம்
பரநிஷ்டை கூடிடப் பணிப்பதும்
என்றோ

---

*1922-ம் ஆண்டில் இயற்றப்பட்டவை.

9. நித்திரை தன்னிலு முன்னை- ராம் ராம்
நீங்கிடா திருந்திடும் நிஷ்டையை
அருள் வாய்

10. பஞ்சப்பு லன்களி னாலே- ராம் ராம்
பாரினில் மொத்துண்டு அலைகின்றேன்
வீணில்

11. சஞ்சல மான இவ் வாழ்வில்-
ராம் ராம்
தடைபட்டு மயங்காமல் தடுத்
தென்னை ஆள்வாய்

12. நிலையற்ற காயத்தை வீணில்-
ராம் ராம்
நித்திய மென்றெண்ணி நிற்குணு
வுன்னை

13. பக்தி செய் தேத்திடா நாயேன்-
ராம் ராம்
பாரினில் மெய்ஞ்ஞானம் பெற்றிட
லெப்போ.

(ஹரிஹரிகோவிந்த)

2

ராம ராம ஜய சீதாராம்

1. ராம ராம ஜய சீதா ராம்
ராம ஜானகி வல்லபராம்

2. கோதண்ட நிற்குண பூசித ராம்
வேதங்கள் தேடிடு விண்ணவ ராம்

3. இராவண சம்ஹார ராகவ ராம்
இராட்சச நாசக ரட்சக ராம்

4. அகலிகை பூசித ஆநந்த ராம்
அகிலச ராசர சேவித ராம்
(ராம ராம)

5. சஞ்சலந் தீர்த்திட வந்தருள் ராம்
கஞ்சனை அழித்த கண்ணனே ராம்

6. நிற்குண நின்மல நீலனே ராம்
சற்குண ஜானகி காந்தனே ராம்

7. ஆஞ்ச னேய அமிர்தமே ராம்
பாஞ்ச சன்ய பரமனே ராம்
(ராம ராம)

8. அச்சுதா நந்த அமலனே ராம்
இச்சை தவிர்த்திடு மிறையே ராம்

9. மாதவா நந்த மகிபனே ராம்
யாதவர் குலமணி அரசே ராம்

10. கேசவ முகுந்த கிருஷ்ண ராம்
மாசிலா துயர்ந்த மங்கள ராம்
(ராம ராம)

3

தன்னையறிந் தின்பமுறும்

1. தன்னையறிந் தின்பமுறும் யோக
மெய்திட இத்
தாரணியில் உண்மை வழி - ராம
நாம மே

2. பாச பந்தம் விட்ட கன்று பாரிலுய்ந்திட
வொரு
பாதை வேண்டி லுண்மை கேளும்-
ராம நாம மே

3. தத்துவங் கட் கப்பாலாம் ஞானபூமி
யில்- பல
சித்தர்களுங் கண்டருந்தும்—ராம
நாம மே

4. வீடு பெற நாட்டமுறு பக்தர் கட்கு நல்ல
ஓடமிது சத்தியங்காண்- ராம நாம மே

5. ஆதியந்த மான வொரு சோதி மயமே
தினம்
ஓதிடுவார் பேறு பேறு—ராம நாம மே

6. வண்ணை நகர் தன்னிலுறை வேங்க
டேசனை-தினம்
எண்ணி வாழ இன்பளிக்கும்-
ராம நாம மே
(தன்னை)

4

ஸ்ரீ இலக்குமி

ஜெய ஜெய ஆநந்த இலக்குமியே.

1. ஜெய ஜெய ஆநந்த இலக்குமியே
ஜெக மெல் லாம புகழ் உத்தமியே

2. எங்கும் நிறைந்திடு மீஸ்வரி யே
ஏம்வினை தீர்த்திட வந்தரு ளே

3. கமலா சனத்துறை கண் மணி யே
கன்மவினைக் கொரு நன் மணி யே

4. நாரா யணன் பங் குறை நா யக மே
நானிலத் தோர் புகழ் நற்சுக மே

5. தாமோ தரன்மகிழ் தற்பரை யே
தாரணிக் காதார சிற்பரை யே

6. தாமரை ஆசனத் தனிமுதலே
தாயே எம்மைக் காத்தருளே

7. சித்திர கூடத் தமர்ந்தவ ளே
சித்தத்துள் நீங்கா தொளிர்பவ ளே

8. சுந்தர ஞான சுக நிறை வே
சந்தத மன் பர்க் கருள் நிதி யே

9. ராகவ ராமன் ஜானகியே
ராவணன் மடியப் பிறந்தவ ளே

10. திருப்பாற் கடலிலுதித்தவ ளே
திருமால் பங்கி லுறைபவ ளே

11. நாரா யணியே நவமணி யே
தாராய் நீயே தவப்பணியே.

(ஜெய ஜெய)

1

பிறர் இயற்றியவை

கோபாலா கோபாலா கோகுல நந்தன
[கோபாலா
ராதாரமண கோபாலா
ராஜீவ நேத்திரா கோபாலா

முரளீ தரஸ்ரீ கோபாலா
முகுந்த மாதவ கோபாலா
நளின விலோசன கோபாலா
கோமள வசனு கோபாலா
நந்தகுமாரா கோபாலா
நவநீத சோமா கோபாலா
வேணு விலோலா கோபாலா
வேதாந்த சீலா கோபாலா

2

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் —ஸ்ரீராம்

நாராயணனும் நமச்சிவாய வெனும்
சாரமான நல்ல தாரக மந்திரம் —ஸ்ரீராம்

நாரத வால்மிகி முனிவர் நவின்றது
ஆரமு தாய்அன்பர்க் கானந்த மீந்தது
—ஸ்ரீராம்

காமாதிக் கள்வரைக் கட்டுட னழிப்பது
நேமநிஷ் டையுள்ள நெஞ்சிலே செழிப்பது
—ஸ்ரீராம்

சஞ்சலத்தைக் கெடுத்துச் சாந்தத்தைக்
[கொடுப்பது

அஞ்சலி அளித்துநம் அச்ச மொழிப்பது
—ஸ்ரீராம்

ஆண்மையும் வீரமும் ஆற்றலும் வெற்றியும்
மேன்மையுந் தருவது விரும்பினால் வருவது
—ஸ்ரீராம்

பக்திவை ராக்கியமும் பரந்தச மரசமும்
சுத்தசச் சிதானந்தச் சித்தியும் அளிப்பது
—ஸ்ரீராம்

3

மங்களம்

ஸ்ரீராமச்சந்திரனுக்குச் ஜெயமங்களம் – நல்ல
திவ்யமுகச் சந்திரனுக்குச் சுப மங்களம்
—ஸ்ரீராம

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு ரவிகுல சோமனுக்கு
—ஸ்ரீராம

கொண்டல் மணிவண்ணனுக்குக்
கண்ணனுக்கு மங்களம்
கௌசலை குமாரனுக்கு
வீரனுக்கு மங்களம்
புண்டரீகத்தாளனுக்கு பூசக்ரதாரனுக்கு
தண்டுளவர் தோழனுக்கு
ஜானகிம ணாளனுக்கு —ஸ்ரீராம

கோவைமணி வாயனுக்கு மாயனுக்கு
மங்களம்
கோதண்ட கையனுக்கு மெய்யனுக்கு
மங்களம்
தாவுகுண சீலனுக்கு சத்திய விலாசனுக்கு
தேவரனுகூலனுக்கு தசரதன் பாலனுக்கு
—ஸ்ரீராம

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனு மன்பனுக்கு முன்தனுக்கு மங்களம்
சகலவுல்லாசனுக்கு தாருமந்திர காசனுக்கு
அகலவிலாசனுக்கு அயோத்தியா வாசனுக்கு
—ஸ்ரீராம

4

வாழி

நீராழி வண்ணனடி நினைப்போர் வாழி
நிறை மொழியோர் பசுநிரைகள் நிதமும்வாழி
பேராழி மண்ணுலகிற் பெருகி வாழி
பிறங்குவண்ணை நகர்வாழி புலவர் வாழி
சீராழி சங்குகதை சிலைவாள் வாழி
சீரியகற் புடைமையறஞ் சிறந்து வாழி
வாராளி சூழிலங்கை வடபால் வண்ணை
வாழ்வேங்க டேசுரன்றாள் வாழி வாழி.

Eelanadu Limited, Jaffna.